# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.80/2018

2025=ம் ஆண்டு ஜுலை மாதம் 08ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.3 லட்சுமி வயது 45, க/பெ குமார்**

**குறுக்கு விசாரணை**

நானும், 2ம் வாதி கலாவதியும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் உள்ள பிரதிவாதிகளின் கணவர்கள் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு ஆரணியில் நடந்து சித்தூரில் வசித்து வருகிறேன். கலாவதியை இராணிப்பேட்டையில் திருமணம் செய்து கொடுத்தோம். அங்கு வீடு இல்லை என்று அவர் அம்மா வீட்டிலேயே வசித்து வருகிறார். என் அம்மாவிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்ற தேதி என்ன என்றால் தெரியாது.

2. கிரைய பத்திரம் எத்தனை வருடத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது என்றால் 8 வருடத்திற்கு முன்பு கிரையம் பெற்றேன். அந்த கிரையப் பத்திரத்திற்கு கிரைய தொகை எவ்வளவு கொடுத்தேன் என்றால் ரூபாய் 3 லட்சம் கொடுத்து கிரையம் பெற்றேன். கிரையம் வாங்குவதற்கு முன்பு சொத்தில் ஏதேனும் வில்லங்கம் உள்ளதா என்று வில்லங்க சான்றை பெற்று பார்த்தேனா என்றால் இல்லை. கிரையம் பெற்ற சமயத்தில் அந்த இடத்தில் ஒரு ஓட்டு வீடும், ஒரு மெத்தை வீடும் இருந்தது என்றாலும் நான் காலி மனை என்று குறிப்பிட்டு வாங்கியுள்ளேன் என்றால் ஓட்டு வீடு இருந்தது. காலி இடம் தான் இருந்தது.

3. மேற்படி இடத்தில் வீடு இருந்ததாக சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து என்னிடம் அபராத தொகை வசூலித்தார்கள் என்றால் இல்லை. என் அம்மா இந்திராணி 11.01.2018 அன்று இறந்து விட்டார் என்றால் சரிதான். எனக்கு கிரையம் 26.12.2017 அன்று கொடுத்தார்கள் என்றால் இல்லை. அதற்கு முன்னதாகவே கிரையம் கொடுத்து விட்டார்கள். என் அம்மா இறப்பதற்கு 2 வருடத்திற்கு முன்பிருந்து புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்றால் சரிதான்.

4. அதற்காக என் அம்மா காஞ்சிபுரம் மற்றும் வேலூரில் சிகிச்சை பெற்று வந்தார்கள் என்றால் சரிதான். என் அம்மா இறப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்பு சுய நினைவின்றி படுத்த படுக்கையாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. நல்லாதான் இருந்தார்கள். அந்த சமயத்தில் என் தந்தை குடித்து விட்டு யார் என்ன சொன்னாலும் கேட்கும் நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் தான் நானும் 2ம் வாதி கலாவதியும் சேர்ந்து என் அம்மாவை சார்பதிவாளர் அலுவலகம் அழைத்து சென்று கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் வ.சா.ஆ.2 நான் வாங்கிய கிரையம் பத்திரமா என்றால் எனக்கு எழுதப் படிக்க தெரியாது. நான் சொல்வது போல் ரூபாய் 3 லட்சம் கொடுத்து கிரையம் பெற்றதாக அதில் இல்லை என்றாலும் ரூபாய் 50 ஆயிரம் கொடுத்துதான் கிரையம் பெற்றதாக உள்ளது என்றால் சரியல்ல. ரூபாய் 3 லட்சம் கொடுத்துதான் கிரையம் பெற்றேன். என் அம்மா என்ன வேலை செய்தார்கள் என்றால் 3 மாடுகள் வைத்திருந்தார்கள் மற்றும் கழனி வேலைக்கு போவார்கள். இதை தவிர்த்து வேறு எதுவும் தொழில் செய்தார்களா என்றால் இல்லை.

6. என் அம்மா எந்த தொழிலும் செய்யாமல் வ.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் வியாபார செலவிற்காக ரூபாய் 50 ஆயிரம் ரொக்கமாக பெற்றுக் கொண்டேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. நான் ரூபாய் 3 லட்சம் கொடுத்தேன். என் அம்மா வியாபாரம் எதுவும் செய்யாமல் கிரையப் பத்திரத்தில் வியாபார செலவிற்காக என்று நானே தயார் செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப் படிக்க தெரியாது.

7. என் அம்மா எப்படி இறந்தார்கள் என்றால் கேன்சர் கட்டி வயிற்றில் இருந்ததால் அதற்காக அறுவை சிகிச்சை செய்து சில நாட்களில் இறந்து விட்டார்கள். அவர் இறப்பதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் 6 மாதங்களுக்கு முன்னர் செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை செய்தும் குணமாகததால்தான் என் அம்மா இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். என் அம்மா இறப்பதற்கு 16 நாட்களுக்கு முன்னர் அவர் சுய நினைவில்லாத போது இந்த கிரையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர்கள் சுய நினைவோடுதான் இருந்தார்கள்.

8. என் அம்மா 08.04.2008ல் தாவா சொத்து சம்மந்தமாக ஜெயசந்திரன் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்றால் அவர் யார் என்றே தெரியாது. பத்திரம் எழுதி கொடுக்கவில்லை. மேற்படி பொது அதிகார பத்திரத்தின் பேரில் 27.04.2015 அன்று தங்கமணி என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. தங்கமணி யார் என்று எனக்கு தெரியாது. முகவர் என்ற முறையில் ஜெயசந்திரன் என் அம்மாவிடம் கணக்குகளை ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு ஜெயசந்திரனை யார் என்று தெரியாது.

9. 07.02.2018ல் சரியான பிரதிபலனுக்கு தங்கமணி என்பவர் பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்தை கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 26.12.2017 அன்று என் அம்மாவிடமிருந்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றது என் அம்மாவிற்கு உரிமை இல்லாதது என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arani.